20 MAY 1932

ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

अतर्कयन्यद्यवमन्यते परैः स्वकर्मणः प्रागशुभस्य तत् फलम् ।
अथावलिप्तोऽवगतोऽवमानभाग्यदर्थ मीह्यान्न तदाप्नुयात्कथम् ॥

"எதிர்பாராதபடி பிறரால் அவமதிக்கப்பட்டால், அது முன்செய்யப்பட்ட தனது அசுப கர்மத்தின் பயனென்று கருதவேண்டும். இவ்விடத்திற்குச் சென்றால் அவமானம் வருமென்று தெரிந்திருக்கும்பொழுதே கர்வத்தையடைந்து போய் அவமானப்பட்டால் வேணுமென்றே வருவித்துக்கொள்ளப்பட்டதாமது. எதற்காக முயல்வானோ அவன் அதன்பயனை அடையாமலிருப்பானா?" ஸம்ஸார வாழ்க்கையில் சுழன்றுவருபவர்கள் கார்யவசத்தாலோ, தைவவசத்தாலோ அன்னியர்களோடு கலந்துகொள்ளும்படி நேரலாம். எந்தக் கார்யத்திலும் அவஸரப்படாமல் நிதானமாய் ஆலோசித்துப் பிரவர்த்திக்கும் ஸ்வபாவமுள்ளவர்களுக்கு அவற்றின்பயன் அனேகமாய் இவ்விதமாகத்தான் முடியுமென்று முந்தியே அனுமானத்தால் தெரிந்துகொள்ளக்கூடியதாகவேயிருக்கும். எந்த மனிதர்களோடு கலந்துகொள்ளப்போகிறார்களோ! அங்கு நேரிடப்போகிற வெகுமதியோ, அவமதியோ அதுவும் அனேகமாய்த் தெரியலாம். அப்படி நிதானத்துடன் பிரவர்த்திக்கிறவன் சிலரோடு கலந்துகொள்கையில் எதிர்பாராதபடியே பிறரிடமிருந்து அவமானத்தை அடைந்துவிடுவானாகில் அதற்குக் காரணம் அவனுடைய ஆலோசனைக்குறைவு என்று சொல்ல முடியாது. ஆனால் அவன் முன் பிறவிகளில் செய்த அசுப கர்மத்தின் பயனுமது என்று நினைக்கவேண்டும். அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளப் போவோமாகில் அதிற்சேர்ந்திருப்பவர்கள் நல்ல குணமுடையவர்கள் அல்ல. நமக்கு நல்ல பேர் கிடைக்காது என்று சில குறிப்புக்களால் தெரிந்துகொண்டிருந்தும் வேணுமென்று அங்கு போவானேயாகில் நினைத்துப்போனபடியே அவமானத்தை அடைவான். அது நியாயந்தானே. எதற்காகப் பிரயத்தினப்படுவானோ அதன் பயனைப்பெறுவானன்றோ! அவரையென்று போட்டது துவரையாகுமா? அவமானம் வருமென்று தெரிந்துகொண்டேபோனால் அவமானப்படவேண்டியது பின்னிட்டுப் பரிதபிப்பதில் பயனென்ன? முன்னமேயே முடிவு தெரிந்திருக்கும்பொழுது அந்தவிடத்திற்குப் போயிருக்கக்கூடாது என்று ஆலோசனைக் குறைவாற்றான் அந்த அவமானம் நேர்ந்ததேயொழிய வேறில்லை என்பதாக அவமானம் நேர்ந்தவிடத்தில் தன் புத்தித்தவறுதலே காரணமானபடியால் தன்மீது பிசகு இருப்பதாக நினைத்து சாந்தியை அடையவேண்டும். பிறர்மீது பழிசுமத்திச் சீறி அவன்மீது விழக்கூடாது. இப்படியே யாவரும் சாந்தநிலையிலிருப்பார்களானால் துவேஷப்பான்மைக்கே இடமிருக்காது. ஆகையால் அப்படியே எல்லோருமிருந்து மேன்மை அடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

பிந்தி வருவதைப்போதிப்பதே புத்தி.

அவ்வப்பொழுது நிகழ்வதைப் பார்த்துக்கொண்டிருப்பதற்காக மாத்திரம் புத்தி படைக்கப்படவில்லை. முன் நடந்தவைகளை நினைத்துப்பார்த்து அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்துக்கொண்டு வருங்காலத்தில் கெட்டவைகளை விலக்கவும், நல்லவைகளைக்கிரஹிக்கவும்ஸாதகமாயிருப்பதற்காகஏற்படுத்தப்பட்டதாம். துக்கத்தை விலக்கும் உபாயங்களை ஆராய்ந்து எடுப்பதே புத்தியின் பயனாகும். துக்கம் விலக்கவேண்டியது என்பதில் எந்த துக்கம் விலக்கப்படவேண்டுமென்று ஆலோசிக்கவேண்டும். அதாவது இறந்தகாலத்து துக்கம் விலக்கவேண்டியதா? அல்லது நிகழ்காலத்திலுள்ளதா? அல்லது வருங்காலத்தியதா? என்று விசாரிக்கும்பொழுது இறந்தகாலத்திய துக்கம் சுயமாகவே விலகிவிட்டபடியால் அதற்காக ஒன்றும் செய்பவேண்டியதில்லை. நிகழ்காலத்திய துக்கம் வந்துவிட்டபடியால் அனுபவித்தேதீர்க்கவேண்டியது ஆகவே வருங்காலத்திய துக்கம்தான் விலக்கத்தக்கது. அங்ஙனமே हेयं दुःखमनागतम् "பிந்திவரப் போகிற துக்கமே விலக்கத்தக்கது" என்று யோகஸூத்திரத்திலும் கூறப்பட்டுள்ளது. வருங்காலத்திய துக்கமும் பலவழிகளாலும் வரலாம். அதாவது ஸொத்து நசித்தல், பந்துக்களைவிட்டுப்பிரிதல், பிறரிடம் அவமானமடைதல், வேண்டாதவை வருதல் முதலியவைகளால் வரலாம். பிந்தி வரக்கூடிய அவைகளை முந்தியே சில குறிகளால் கண்டுகொண்டு அவைகளைப் பரிஹரித்து அந்த துக்கம் வராமல்செய்துகொள்வதே புத்தியைப்படைத்ததற்கு அடையாளம். அன்றியும் விதையிருந்தால் காலதேச நிமித்தாதிகள் கூடும்பொழுது அது முளைக்குமென்றும், முளைமாத்திரம் காணப்பட்டால் விதை முன் இருந்திருக்கவேண்டுமென்றும் புத்திமானுக்குப்புலப்படாமற்போ

காது. அதுபோலவே சுக துக்காதிகள் திடீரென வந்துவிடுமாயின்
இதற்குக் காரணம் திருஷ்டமாகக் காணப்படாவிடினும் அதி
ருஷ்டமாயாவது இருந்திருக்குமென்று ஊஹிக்கலாம். சுக துக்க
காரணங்கள் காணப்பட்டால் இதற்குப் பயனாக சுக துக்கங்கள்
வரலாமென்றும் ஆலோசிக்கலாமல்லவா! இதற்காகவென்றே
கர்மவிபாகநூல்கள் பெரியோர்களால் அனுபவித்துப்பார்த்து
எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. சோதிடமென்ற பெரிய சாஸ்
திரமும் வரப்போகிற சுபாசுபங்களைத் தெரிந்துகொள்வதற்காகவே
வேதாங்கமாக வெளியிடப்பட்டிருக்கின்றது. அவைகளின்றும்,
அனுமானாதிகளாலும் பிந்தி வரப்போகிறவைகளை முன்னமேயே
தெரிந்துகொண்டு சுபம் நேரப்போவதாகத் தெரிந்தால் சந்தோஷ
மாயிருக்கலாம். அசுபம் நேரப்போவதாகத் தெரிந்தால் அதை
விலக்கிக்கொள்ள சாஸ்திரத்தில்க் கண்ட ஸாதனங்களைச் சரிவர
அனுஷ்டித்து துக்கம் நேராதபடி செய்துகொள்ளவேண்டும்.
புத்தியுள்ளவன் இப்படி செய்துகொள்ளாவிடில் புத்தியில்லாத
பசு முதலிய பிராணிகளுக்கும் இவனுக்கும் என்னபேதம். புத்தி
தானிருக்கிறதேயென்று சாஸ்திரத்தை மீறிநடந்துவிடக்கூடாது.
இந்த வார்த்தையைத் தற்காலத்தியவர்கள் சிலாக்யமாயெடுத்துக்
கொள்ளமாட்டார்கள். சாஸ்திரத்தை மீறியே நம்முடைய புத்தி
சக்தியைச்செலுத்தி கார்யத்தை ஸாதிக்கவேண்டுமென்பது தற்
காலத்தியார்களின் கொள்கை. அப்படி அவர்கள் நினைக்கிறார்
களேயன்றி கார்யத்தை ஸாதித்துவிட்டதாக காணப்படவில்லை.
சாஸ்திரமென்பது ஸத்திய ஸங்கல்பனான ஸர்வேசுவரனுடைய
ஆக்ஞாரூபமானது. அதைமீற அற்பசக்தியுள்ளவனான ஜீவனுக்கு
என்ன ஸ்வாதந்திரியமிருக்கிறது என்பதை அவர்கள் யோசனை
செய்கிறதில்லை. இது புத்தியையடைந்திருப்பதற்கழகில்லை. ஜீவ
ராசிகளுக்கு புத்தி சக்தி எவ்வளவு அதிகமாயிருந்தாலும் ஸர்
வேசுவரனுடைய ஸங்கல்பத்தை மீறமுடியுமா? ஒருக்காலும்
முடியாது. முடியாத கார்யத்தில்த்தலையிடுவதும் புத்திக்குறை
வைக்காட்டுகிறது. வைத்திய நூல்களிலும் எல்லா ரோகங்களுக்
கும், எல்லா அனர்த்தங்களுக்கும் प्रज्ञापराध: எனப்படும் புத்திக்
குறைவே காரணமென்று பல யுக்திகளால் நிரூபிக்கப்பட்டிருக்
கிறது. அந்தக் குறைவை விலக்கிக்கொள்வதும் புத்தியின்
அடையாளம். அதனால் உண்மையில் புத்திமானாயிருப்பவன்

தன் புத்திக்கு சக்தி இவ்வளவுண்டு—அது பெரியோர்களின் புத்திவலிமையை மீறமுடியாது—என்று நிதானித்துத் தெரிந்துகொண்டு சாஸ்திரம் ஸதாசாரம் இவைகளை அனுஸரித்தே தன் புத்தியைச்செலுத்தி தீர்க்காலோசனை செய்து தனக்கும், தேசத்திற்கும், தேவலோகத்தாருக்கும் ஹிதமாகவே ஆகும்படி செய்ய வேண்டிய கார்யங்களைச் செய்யவேண்டும். அப்படியே யாவரும் செய்து சிரேஸ்ஸையை யடைவாராக. சுபம்.

பத்திராதிபர்.

ஜாதி வியவஸ்தை.

இப்பொழுது எங்குபார்த்தாலும் தீண்டாமையைப் பற்றிய பேச்சை அடியோடு ஒழித்துவிடவேண்டுமென்று விரும்புவோரின் கோலாஹலமே தங்குதடையன்னியில் பரவிவருகின்றது என்பது எல்லோருக்கும் தெரிந்திருப்பதால் விஸ்தாரமாக எடுத்துக்காட்டவேண்டிய விஷயமில்லை. கொஞ்சநாளாக ப்ராமணத்துவேஷம் நாளுக்குநாள் வலுத்துக்கொண்டேவருவதால் அதன் மூலமாகப் பலபேர்கள் சமாசாரப் பத்திரிகைகளில் ஆக்கிரஹத்துடனும்ஆத்திரத்துடனும்தீண்டாமை விலக்கைப்பற்றிப் பலவாறாக எழுதிவருகிறார்கள். அவர்களின் கருத்தாவது "எந்தமனிதன்தீண்டக்கூடியவர், தீண்டத் தகாதவர் என்ற வேற்றுமையைக் கற்பித்துக்கொண்டு மனிதவகுப்பில்பிறந்தவர்களுக்குள்ளேயே சிலரைத் தீண்டத்தகாதவர் என்று நினைத்துக்கொண்டதோடுமாத்திரம் நில்லாமல் அதை அனுஷ்டானத்திலும் கொண்டுவரவேண்டும் என்று முயன்றானோ! அல்லது முயலுகிறானோ அவனெல்லாம் ஜனஸமூகத் துரோஹி, தேசத்துரோஹி, தேவத் துரோஹி, மதத் துரோஹி, ஆத்துமத் துரோஹியாகவும் ஆகிறான் என்பதில் தடையேயில்லை. தீண்டாமையையொழிப்பதைப்பற்றி சாஸ்திரப்பிரமாணம் எப்படி இருக்கிறதென்று ஆராய்ச்சிசெய்யப் புகுவதும் அனுவசியமானதே. எப்பொழுது நம்முடைய புத்தி குணதோஷங்களைத் தீர்மானிப்பதில் பதில் சாமர்த்தியம் பெறவில்லையோ! சாமர்த்தியம் பெற்றிருந்தும் பிரவிருத்திக்கவில்லையோ, அப்பொழுது வேண்டுமானால் சிலர் சாஸ்திர ஆராய்ச்சி செய்வது

அவசியமாக ஆகட்டும். அன்றியும் நம்முடைய புத்திக்குப் புலப் படாத எந்த ரஹஸ்யாம்சத்தை சாஸ்திரம் போதித்துவிடப்போ கிறது. சாஸ்திரமென்பது சுய நலத்தையும், சுயப் பெருமையை யும் பாராட்டிய ஓர் சில வகுப்பார் எழுதிவைத்துக்கொண்ட எழுத் துத்தானே. அவர்களுடைய புத்திக்கு நம்முடையபுத்தி தாழ்ந் ததா? ஆகையால் இவ் விஷயத்தில் சாஸ்திர ஆராய்ச்சி வீணே. சிலாது பிடிவாதத்திற்காக இவ் விஷயத்திலும் சாஸ்திர ஆராய்ச்சி செய்துபார்ப்போமாகிலும் ஒரு சாஸ்திரமும் தீண்டாமையை ஒழித்தல் அனுசிதமானது என்று சாஸனம் செய்யவில்லை என்ப தாதியாகப் பல வார்த்தைகளை எழுதிவிடுகிறார்கள். அதன்றியும்—

अमित्रे विश्वासः श्वपचनिकरे सौमिकरसः कपाले गङ्गांभः
खलपरिषदङ्के सुजनता । परिक्षीणाचारे श्रुत मनुपनीते च निगमः
स्वतःसिद्धां शुद्धिं त्यजति विपरीतं च फलति ॥

"சத்துருவினிடத்தில் விசுவாஸமும், சண்டாளனிடத்தில் ஸோம ரஸமும், மண்டையோட்டில் கங்காதீர்த்தமும், துஷ்டர்களுடைய பரிஷத்துக்குப் பக்கத்தில் ஸாது ஜனங்களின் சங்கமும், ஆசார மில்லாதவனிடத்தில் வேத வித்யையும், உபனயனமாகாதவனி டத்தில் வேதமும், இயற்கையாயமைந்த சுத்தியை விட்டுவிடும். விபரீதப் பயனையுமளிக்கும்" என்றும்,

रत्नं हि स्वोचितस्थाने स्थितमेवानुशोभते ।
अपदेशस्थितं तत्तु न शोभेत तथा द्विजः ॥

"உயர்ந்த இரத்தினமாயினும் தனக்கு யோக்கியமான ஸ்தானத்தி லிருந்தாற்றான் சோபிக்கும், உசிதஸ்தானம் தவறி வைக்கப்படு மாயின் சோபிக்காது. அதுபோல்தான் துவிஜாதியும்,, என்றும் பெரியோர் சொல்லியிருக்கிறபடி சிலர் துவிஜாதியிற் பிறந்தும் தமது நிலைமைதவறி பாஷாந்தரம் பயின்றும், துவீபாந்தரம் சென்றும், கெட்டவழியிலிறங்கிவிட்டபடியால் இயற்கையாய் அமைந்த சுத்தியை இழந்து அசுத்தராய்விட்டார்கள். அவ்வாறு குமார்க்கத்திலிறங்கியவர்களுக்குப் பாஷாந்தரப் படிப்பினால் ஒரு விதமாக அறிவு உண்டாயிருந்தும் அது அனுகூலமான பயனை அளிப்பதில்லை. அனர்த்தத்தையும் பலவாறாக விளைவிக்கின்றது என்ற நியாயப்படி அந்தணர்குலத்துதித்த சிலர் தற்காலத்திய

புது நாகரீகப்படி ஆங்கிலபாஷையைக் கற்று, ஸம்ஸ்கிருத பாஷையிலும் ஸ்வல்ப ஞானத்தை சம்பாதித்துக் கொஞ்சம் பேசும் திறமையும் அடைந்துவிட்டதாக நினைத்துக்கொண்டமாத்திரத்திலேயே தம்மை ஸர்வக்ஞர்களாகப் பிரமித்துக்கொண்டு ஜகத் வியாபாரத்தில் அதிகாரம் பெற்றவர்கள்போலத் தோன்றியபடியெல்லாம் சீர்திருத்தக் கிளம்பி மற்றவர்களை நல்லவர்களாக்கிவிடுகின்றார்கள். அதில் அவர்கள் தேசக்ஷேமத்திற்காகவே பாடுபடுவதாக வெளியில்சொல்லிக்கொண்டு பேசிவரும் பலவிஷயங்களுள் ஜாதி வியவஸ்தை என்பதுமொன்றும். அதைப்பற்றி அவர்கள் பத்திரிகைகளில் எழுதுவதும், பிரஸங்கமேடைகளில் பேசுவதும் எல்லைகடந்ததாயிருக்கிறது. அவர்களுடைய முக்கியமான சில அபிப்பிராயங்களாவன ''மானிட ஜாதியாருள் வேற்றுமை பாராட்டுவது உசிதமேயில்லை. அமேத்யாதிகளின் சேர்க்கையால் பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகின்ற அசுத்தியைக் காட்டிலும் வேறு அசுத்தியென்பதும் அதைத் தண்ணீரைவிட்டுக் கழுவி சுத்திசெய்வதைவிட வேறு சுத்தியென்பதும் இல்லவேயில்லை. அப்படியிருகையில் சில மானிட சரீரத்திற்குப் பிறப்பிலேயே ஏதோ ஒரு அசுத்தி இருப்பதாகவும், சில சரீரத்திற்குப் பிறப்பினாலேயே சுத்தி இருப்பதாகவும் கற்பிப்பதும், பிறவியினாலேயே சில சரீரம் சிறந்ததென்றும், சில சரீரம் தாழ்ந்ததென்றும் கற்பிப்பதும் ஆதாரமில்லாததே. நம் பாரதநாட்டில் வெகுகாலத்திற்கு முந்தியே கொஞ்சங்கூட விவேகமில்லாமல் மனிதர்களுக்கேயே ஜாதியினாலேற்பட்ட உயர்வுதாழ்வை அசைக்கமுடியாதபடி பெரிய அஸ்திவாரத்துடன் ஏற்படுத்தி ஜகத்தையே பல அனர்த்தங்களுக்குள்ளாக்கிவிட்டார்கள். இவர்கள் செய்தவேலை எல்லா ஜாதியுமே அடியோடு அழிந்துபோவதற்குக் காரணமாய்விட்டதேயன்றி வேறு ஒன்றுமில்லை. தற்போது நம் கோரிக்கையெல்லாம் நிறைவேறுமற்போவதற்கும், பாரதமக்கள் பலவிதத்திலும் கஷ்டப்படுவதற்கும் இந்த ஜாதிவித்தியாஸமே காரணமாயிருக்கிறது. இதைத் தவிர வேறு எதுவும் காரணமில்லை. இந்த ஸமயத்தில் இந்த ஜாதி வித்தியாஸமொன்றுமாத்திரமில்லாமலிருக்குமாயின் நாம் மேன்மையான பதவியை நிச்சயமாய் அடைந்திருப்போம். சம்சயமேயில்லை'' என்பதுபோலவாம். இவ்விதமாக துவிஜாதிகளுக்குள்ளேயே சிலரும், மற்றவர்களும் பிறர்துக்கத்தை ஸஹிக்

காத கருணைக்கடலான மஹானுபாவர்களுள் தம்மை முதன்மைப் பட்டவாராகப் பாவித்துக்கொண்டு இந்த ஜாதிவித்தியாஸத் தோற்றமே பெரிய சிரேயஸ்ஸுக்கெல்லாம் மஹாப் பிரதிபந்தகமாயிருப்பது பற்றி முதல்முதலாக அதை அடியோடு அழித்துவிடுவதே பெரியதர்மம்என்று நினைத்துப் பாடுபட்டுவருகிறார்கள். இதற்காக ராஜஸ்தானத்திலும் எவ்வளவு ஸஹாயம் கிடைக்குமோ, அதை அடைவதற்காகப் பல துறைகளிலும் இரங்கி வேலை செய்து வருகிறார்கள்.

இப்படி தேசக்ஷேமத்திற்கென்று பெயர்வைத்துக்கொண்டு பாடுபட்டுவரும் இவர்களது பிரயாஸம், தேசத்திற்கு அனுகூலமா பிரதிகூலமாவென்று நிபுணர்கள் நிதானித்துக் கவனிக்கவேண்டும். கடுதாசுபேனா-மைக்கூடுவேண்டிய வரை இருக்றேதேயென்று கண்டதைஎழுதிவிடுவதினால் உண்மைவெளிப்பட்டுவிடாது. முன்னோர்கள் சுயநலத்தைக்கருதிமோசஞ்செய்துவிட்டார்களென்றும், தற்காலத்தியவர்கள் பொது நலத்தையே கருதி உழைப்பவர்கள் என்றும் இவர்கள் சொல்லிக்கொள்வதினால் வெளிப்படுவதைத் தவிர வேறு மூலப்பிரமாண முண்டாவென்றுபார்த்தால் ஒன்றும் கிடைக்கவில்லை. இவர்கள் சொல்வது மாத்திரம் சரி, முன்னோர்கள் சொல்லியிருப்பது தவறு என்றுவது, இவர்களுடைய எண்ணம் நல்லது, முன்னோர்களுடையஎண்ணம்கெட்டது என்றுவது எப்படிக்காரணமில்லாமல்நினைத்துவிடமுடியும். ஜாதி வித்தியாஸமிருப்பது சிரேயஸ்ஸையடையக் காரணமேயொழிய சிரேயஸ்ஸுக்குப் பிரதிபந்தகமேயில்லை என்று பிரமாணமூலமாய் ஆராய்ச்சிசெய்தவர்களுக்கு அந்த உண்மை வெளிப்படும். "தடியெடுத்தவனெல்லாம் தண்டக்காரன்" என்ற பழமொழிபோல்காலவித்தியாஸத்தால் கண்டவனெல்லாம் பேச்சுக்காரனாய்க் கிளம்பிவிட்டான். பேச்சோடுநில்லாமல் எழுதவும் தலைப்பட்டுவிடுகிறான். பேசுவது ஒருமாதிரியாய்ப்போனாலும் எழுதுவது அப்படி போகக்கூடாது. அது உண்மையாகவே இருக்கவேண்டும். அதனாற்றான் "ஆயிரம் வார்த்தைசொல்லலாம். ஒன்றைக்கூட எழுதக்கூடாது" என்று பெரியோர் சொல்லிவருவது வழக்கம். ஆகவே நன்றாய் ஆலோசித்து எழுதவேண்டும். தற்போது கிடைத்திருக்கும்சரீரத்தையும் அதுமாத்திரம் சுகப்படுவதையும், அதற்காகவேண்டிய இஹலோக லாபங்களையுமே பெரிதென்றும் பிரதானமென்றும் நினைத்

திருப்பவர்களுக்கு சாஸ்திரத்திற்குக் கட்டுப்படவேண்டிய அவசியமில்லை யென்றாலும், இந்த சரீரம் போய்விடுந்தருணத்தில் இதை யொட்டிவந்தவையெல்லாம் அந்த சரீரத்தோடு போகாமல் ஆங்காங்கே நின்றுவிடுவதைப்பார்க்கையில் இவன் நினைத்தபடி ஒன்றும் நடக்கிறதில்லை. எவனோ ஒருவன் ஆட்டிவைக்கிறான். அவனுடைய ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டே தீரவேண்டுமென்று ஏற்படும். அப்படியிருக்கையில் பரலோகம் உண்டென்றும், புண்ணிய பாபமுண்டென்றும், நம்பி பரமேசுவரனுடைய ஆக்ஞைக்குப் பயந்து நடப்பவர்கள் சாஸ்திரத்திற்குக் கட்டுப்பட்டே தீரவேண்டும். அப்பொழுது எந்த விஷயத்திலும் சரி சாஸ்திரத்தைப் பார்த்து அது நிர்ணயிக்கிறபடி நடக்கவேண்டுமேயன்றி தன்னிஷ்டம்போல் போய்விடக்கூடாது. தேவத்துரோஹிகள் — ஆத்மத் துரோஹிகள் என்று வைதிகர்களை தூஷிக்குப்பொழுதாவது தேவர்களையும் ஆத்மாவையும் நம்பியிருப்பதுபோல் பேசுகிறார்கள். ஆத்துமாவுக்கும், தேவர்களுக்கும் ஜாதிப் பிரிவினை இருப்பது ஹிதமா? அல்லது அது அழிவது ஹிதமாவென்று அவர்களைக்கேட்டால் ஜாதிப் பிரிவினையிருப்பதே ஹிதமென்றுதேவர்கள் சொல்லுகிறார்களென்று பிராமாணிகர் அபிப்பிராயப்படுகின்றனர். வர்ணாசிரமப்பிரிவினையை அழிக்கத் தலையிட்டவர்களைத்தான் துரோஹிகளென்று தேவர்கள் நினைத்து அவாது இஷ்டம் சித்திபெறாமல் போகும்படியும் செய்துவிடுகிறார்கள். ஜீவராசிகளுக்கு பலவிதமான யோனிகளில் ஜன்மலாபம் வருகிறது. அதற்குக் காரணம் பூர்வஜன்மங்களில் செய்த கர்மாவென்றே சாஸ்திரம் கூறுகின்றது, பிரமாணிகர்களும் அவ்விதமே ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள். முக்குணங்களின் மாறுதலுக்கேற்றவாறாகவும் பிறவிகிடைக்கின்றது. இதில் நான்குகாலுள்ள பசுஜாதிகளை திருஷ்டாந்தமாகப் பார்ப்போம். பசுஜாதியில் உட்பிரிவு பலவிதப்பட்டதாயிருக்கிறது. அங்கு ஜாதிப்பிரிவினையில்லையென்று எவராலும் சொல்லமுடியாது. அது போலவே மனுஷ்யஜாதியிலும் உட்பிரிவினையிருப்பதை எவ்விதத்திலும் மறுக்கமுடியாது. அதை அழிக்கவும் முடியாது. ஜாதியென்பது நித்யமென்றே தார்க்கிகர்களின் கொள்கை. சிலர் அதை பரமார்த்த ஸத்தியமென்று அங்கீகரிக்காவிடினும் வியவஹாரகாலத்தில் வியாவஹாரிக நித்தியமாக யிருப்பதாகத்தான்

அங்கீகரிக்கிறார்கள். ஆகவே அது அழிக்கக்கூடியதல்ல. பசுக்களின் அவாந்தர ஜாதிகளில் ஒன்றற்கொன்று குண தர்மாதிகள் வேறுபட்டிருப்பது போலவே மனுஷ்யஜாதியிலும் குணதர்மாதி வேற்றுமை இருக்கின்றது. அதைநிராகரிக்கமுடியாது அந்தவேற்றுமையும் பிறப்புமுதற்கொண்டே சித்தித்திருக்கின்றன. அதைத்தான் ஜாதியென்று வியவஹரிக்கிறார்கள். ஒரு வியக்தி ஜனித்தபோதே அபி வியக்தமான ஜாதி எவ்விதகாரணத்தைக்கொண்டும் மத்தியில் மாற்றமுடியாது. கழுதை, பன்றி, நாய், முதலிய நாற்கால் பிராணிகளில் ஜாதிபேதமிருப்பதும், தர்மபேதமிருப்பதும், உயர்வு தாழ்வு இருப்பதும் பிரத்தியக்ஷமே. அதுபோல் மனுஷ்யஜாதியிலும் அவாந்தர ஜாதிபேதமிருப்பதும், உயர்வு தாழ்வு இருப்பதும் ஸஹஜமே. அதனால் தீண்டாமையிருப்பதும் உசிதமே. இதை அழிக்கத் தலையெடுத்தவர்கள்தான் ஸர்வத்துரோகிகளென்று தேவர்களின் அபிப்பிராயம். ஆகையால் ஜாதி வியவஸ்தையிருப்பதுதான் தேச முன்னேற்றத்திற்கும் ஸகல சிரேயஸ்ஸுக்கும் மூலகாரணமாயுள்ளது. பிரளயகாலத்திற்றான் இந்த பேதம் அற்றுப்போகும். ஸிருஷ்டிஸ்திதிகாலங்களில் இந்த பேதமிருந்தே தீரும். அதை அழிக்க எவனாலும் முடியாது. அதனால் பரமேசுவரனால் ஏற்படுத்தப்பட்ட ஜாதி வியவஸ்தையை மனுஷ்யன் மாற்றமுடியாது. அதையனுஸரித்தே சுருதிஸ்மிருதிகள் விதித்தவாறு வர்ணாசிரமத்தை அனுஸரித்து யாவரும் க்ஷேமத்தை அடைவார்களாக.

வாஸுதேவன்.

சென்னை ஸ்ரீசங்கரமடம்

ஸ்ரீசங்கரஜயந்தி மஹோத்ஸவம்.

ஸ்ரீசங்கர ஜயந்தியைமுன்னிட்டு 7-5-32, முதல் 5-தினங்கள் சென்னை தம்புசெட்டித்தெரு ஸ்ரீசங்கரமடத்தில் பிரதிதினம் காலையில் வேத பாராயணத்துடன் மஹந்யாஸ பூஜையும் ஸஹஸ்ர நாமார்ச்சனையும் ப்ரஸ்தானத்ரயபாஷ்ய பாராயணமும் நடைபெற்றன. ப்ரதிதினம் மாலை பல பெரிய வித்வான்கள் அரிய வேதாந்த உபன்யாஸங்கள் செய்தார்கள். ப்ரம்மஸ்ரீ ச்வேதாரண்யம் நாரா

யணயஜ்வா, ஸாஹித்ய வாங்முகபூஷணம் ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா, திவான் பகதூர் T. R. ராமச்சந்திர அய்யர் B,A.B.L. சித்தமல்லி சுப்பிரமண்ய அய்யர், T. ராமச்சந்திரதீக்ஷிதர் K. பாலசுப்ரமண்ய அய்யர் B,A.B,L. ராமபத்ர அய்யர் முதலிய வித்வான்கள் வாசாமகோசாமாக எல்லோரது உள்ளம் உருகும் படி உபன்யஸித்தனர்.

திருப்புகழ் மணி T. M. கிருஷ்ணஸாமி அய்யர் B,A.B,L. K. R. வெங்கட சர்மா B,A.B.T. ஆகிய இவர்கள் திருப்புகழ் பஜனையை இன்னிசைக் கருவிகளுடன் நடத்தினர். R. ஸோமசுந்திரமய்யர் B,A,B,L. ஸ்ரீகாமாக்ஷி திருப்புகழும், கம்பதாஸர் சுப்பிரமண்ய அய்யர் அவர்கள் ஆசார்ய சரித்திரப்பாக்களையும் பாடினார்கள். 11உ காலை ஸ்ரீமதாசாரியாளுக்கு விசேஷவைபவத்துடன் திவ்யாபிஷேகம் நடைபெற்றது. எண்ணிறந்த பிராம்மணர்களுக்கு ஸந்தர்ப்பணையும், ஏழைகளுக்கு அன்னதானமும் சிறப்பாக நடந்தது. ஸ்ரீமதாசார்யாள் அனுக்ரஹித்த அவதார கட்ட புஸ்தகத்திலுள்ள விஷயம் ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா அவர்களால் உபன்யசிக்கப்பட்டு இப் புத்தகம் எல்லோருக்கும் இலவசமாக அளிக்கப்பட்டது.

அன்றிரவு ஸகல ஸந்நாஹ வைபவங்களுடன் பட்டணப்ரவேசம் நடைபெற்றது. இக்கொடியகாலத்திலும் இம் மடத்து அதிகாரியான ஸ்ரீமான் R. சுப்பிரமண்ய அய்யர் அவர்கள் பெருமுயற்சியால் சென்ற ஆண்டுகளை விட சிறப்பாகவே உத்ஸவம் கொண்டாடப்பட்டது. பல்லாண்டு இதேபோல் நடத்திவைக்கும் படி பல பக்தர்கள் அவரை ஆசீர்வதித்துச் சென்றனர்.

ல.ராமச்சந்திர சாஸ்திரி,

ஸ்ரீ நடேசஸ்துதி.

लोके संसृतिकानने चिरतरं भ्रान्तस्य जन्तोः पुनः
त्वत्पादब्ज समागमेऽस्ति सरणिः श्रीपञ्चवर्णात्मिका ।
बुध्वाऽहं जनकोपदेशवशात स्तामेत्य पादान्तिकं
त्वत्पादाब्जनिवासमेव सततं याचे भवानीपते ॥१०३॥

ஓ பார்வதீகாந்தா உலகில் ஸம்ஸாரார்ணவத்தில் பகுகாலஞ் சுற்றிக்கொண்டு இருக்கிற ஜனத்துக்கு உம்முடைய சரணாவிந்தத்தை அடைவதில் பஞ்சாக்ஷரரூபமாக மார்க்கமானது இருக்கின்றதுதான். என்னுடைய பிதாவினுடைய உபதேசத்தால் உம்முடைய பாதஸமீபத்தை அடைந்து எப்பொழுதும் உம்முடைய சரணகமல வாஸத்தையே யாசிக்கின்றேன். ஸ்ரீமந் நடராஜருடைய வாஸஸ்தலமான சிதம்பர சித்ஸபையின் ஐந்து படிகளை பஞ்சாக்ஷர ரூபமாக புராணங்கள் கூறுகின்றன. ஆகையால் நடராஜருடைய சரணத்தை அடைவதற்கு பஞ்சாக்ஷரமே சாதனம் என்பதை படிகள்போதிக்கின்றன என்று ஸ்துதியில் நிரூபித்திருக்கிறார். வித்தைகளுக்குள் வேதம் உத்கிருஷ்டம் என்றும் அதிலும் **नमश्शिवाय च** என்ற அநுவாகம்உத்கிருஷ்டம் என்றும் அதிலும் **शिव** என்கிற இரண்டு அக்ஷரம் மிகவும் உத்கிருஷ்டம் என்றும் சாஸ்திரங்கள் கூறுவதாலும் அந்த சிவபதத்துடன்கூடிய பஞ்சாக்ஷர மகாமந்திரமானது மந்திரங்களுக்குள் அத்யுத்தமமென்று வேதசாஸ்திரங்கள் கூறுகின்றன. (103)

त्वत्कारुण्य लता विभातु सततं भक्तद्रुम व्यापिनी
कैवल्याख्य फलप्रदाननिरता भक्त्यंबुसंवर्धिता ।
संसाराख्य गदार्तलोक सुखदा तिल्लाटवीमध्यगा
श्रीमत्कल्पकवल्लरीं हसति यास्वीयै र्गुणैस्सर्वदा ॥१०४॥

பக்தர்களென்ற விருக்ஷத்தில் படர்ந்ததும், மோக்ஷமென்ற பழத்தைக் கொடுப்பதும்,பக்திஎன்றஜலத்தால் வளர்க்கப்பட்டதும் ஸம்சாரமென்ற ரோகத்தால் பீடிக்கப்பட்டஜனங்களுக்குசுகத்தை தருகின்றதும், தில்லைவனத்தின் நடுவில் இருக்கின்றதும், தன்னுடைய ஔதார்யாதி குணங்களால் கல்பகலதையைப் பரிஹஸிக்கின்றதுமான, ஓ சபாபதே உம்முடைய காருண்யமென்ற கொடியானது, எப்பொழுதும் பிரகாசிக்கட்டும். (104)

त्वद्भक्तलोकजलधिःस्तुतिवीचियुक्तः
त्वद्वक्त्रचन्द्रमभिवीक्ष्य सदुन्नतारम् ।
संवृद्धिमेति सुतरां परितोषयुक्तः
सम्मेदबाष्प लहरीमपि नाथ मुञ्चन् ॥१०५॥

ஸ்துதிகளென்ற அலைகளோடு கூடிய பக்த ஜனங்களென்ற சமுத்ரமானது ரத்தினங்களென்ற நக்ஷத்திரங்களுடன்கூடிய உம்முடைய முகமென்கிற சந்திரனைப்பார்த்து ஆனந்த பாஷ்ப மென்கிற பிரவாஹத்தை பெருக்கிக்கொண்டு மிகவும் சந்தோஷத்தோடு விருத்தியடைகின்றது. (106)

सत्यं ब्रवीमि भवदीय नतांघ्रिपद्मात्
अन्य न्न भाति हृदये मम कुञ्चितांघ्रे ।
तस्मात्त्वदीयचरणैकनिवासलिप्सा
संवर्धते शिव कृपामवलंब्य पाहि ॥१०६॥

ஓ குஞ்சிதபாத உம்முடைய ஸ்ரீ திவ்ய குஞ்சித சரணாரவிந்தத்தை தவிர வேறொன்றும் என்னுடைய சித்தத்தில் தோன்றுகிறதில்லை. உண்மையைச் சொல்லுகின்றேன். ஆதலால் உம்முடைய திவ்ய சரண வாஸத்திலேயே ஆசை விருத்தி அடைகின்றது ஓ பரசிவ கருணைசெய்து காப்பாற்றும். (106)

भवजलधिनिमग्ना मानुषा चित्सभेशं
नमत नमत शंभुं तावता किन्तु खेदः ।
तदनु च भवदुःखं नाशयित्वा दयालोः
चरणकमलयुग्मं शाश्वतं तद्भजध्वम् ॥१०७॥

சம்சார சமுத்ரத்தில் மூழ்கின ஓ ஜனங்களே சகல மங்களங்களைத் தருகின்ற ஸ்ரீ சித்ஸபேசரை வணங்குங்கள், வணங்குங்கள். அதனால் என்ன சிரமம். பிறகு சம்சார துக்கத்தை நாசஞ்செய்து கருணாமூர்த்தியின் ஸ்திரமான ஸ்ரீ திவ்ய சரணபதவியை அடையுங்கள். (107)

त्वत्पादपद्मभजनोचितजन्म लब्ध्वा
त्वत्पादसेवनमहं यदि नो लभेय ।
पट्टाभिषेकरहितस्य नरस्य राज-
वंशे जनेर्मम जनेश्च च न कोऽपि भेदः ॥१०७॥

ஓ ஸபாநாயகா உம்முடைய சரணாரவிந்தத்தினுடைய ஸேவைக்கு உசிதமான ஜன்மாவை அடைந்தும் உம்முடைய சரணஸேவையை நான் அடையாமல் இருப்பனேயாகில் பட்டாபிஷேகத்தை அடை

யாதவம்சத்தில் ஜனித்தபுருஷனுடைய உத்பத்திக்கும் என்னுடைய உத்பத்திக்கும் ஒருவிதமான பேதமும் இல்லை. (108)

नाथ त्वदंघ्रिविनिवेशितमानसत्वात्
मद्वंशरक्षणविधौ मम नास्ति भारः ।
तस्मादुमेश भवतैव विधारणीय-
स्सर्वोऽपि देव करुणाकर मामकीनः ॥१०९॥

ஓ நாத உம்முடைய சரணத்தையே தியானம்செய்கின்ற மதத்தை உடையவனாக இருப்பதால் என்னுடைய குடும்பரக்ஷண கார்யத்தில் எனக்கு பாரமில்லை ஆகையால் ஏ உமாபதே ஓ கருணாகரா என்னுடைய ஸமஸ்த்த குடும்பகார்யத்தையும் நீரே பார்த்து ரக்ஷிக்கவேணும். (கீதை.) (109)

अनन्यांश्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते ।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥

என்னைத்தவிர வேறொன்றையும் சிந்திக்காமல் இருக்கின்ற எந்த பக்தஜனங்கள் என்னை உபாஸிக்கின்றார்களோ தன்னைக்காட்டிலும் வேறுஎன்ற பேதபுத்தியை அடையாத அதாவது பரோக்ஷமான அத்வைத ஞானமுடைய எந்தஜனங்கள் என்னை உபாஸிக்கின்றார்களோ, எப்பொழுதும் என்னையே தியானஞ்செய்கின்ற அவர்களுடைய குடும்பார்த்தமுள்ள திரவ்யலாபம் முதலான ஐஹிகயோக க்ஷேமத்தையும் புனர்ஜன்ம ரகித ஆநந்தாத்மைக்ய ரூபமான வைதிகயோகக்ஷேமத்தையும் பக்தர்களுடைய ப்ரேரணை இல்லாமலே நான் வஹிக்கின்றேன் என்ற கீதாவசனத்தை இந்தஸ்துதியில் பிரகாசித்திருக்கின்றார். (109)

नाथ त्वदंघ्रिकमले हृदयं मदीयं
भक्तिं दधातु भगवन् जननं यदि स्यात् ।
माभूदुमेश विषयान्तरसङ्गयुक्तं
सत्यं वदामि मम वाञ्छितमेतदेव ॥११०॥

ஜன்மமானது ஏற்படுமேயானால் ஓ ஜகத்பூஜ்யரான நாதா உம்முடைய சரணகமலத்தில் என்னுடையமனமானது எப்பொழுதும் பக்திஉடையவேண்டும் ஓ உமாநாதா விஷயங்களில் ஆஸக்தி உடையதாக இருக்கவேண்டாம் உண்மையை சொல்லுகின்றேன் என்னுடைய இஷ்டம் இதுவே. (110)

नाथ त्वदंघ्रिसविधे निवसन् दयालो
जल्पाम्यहं प्रतिदिनं परिहृत्य लज्जाम् ।
तस्मान्नटेश सरलां शृणु भारतीं मे
तिल्लाटवीश कृपया मयि दैन्यभाजि ॥१११॥

ஓ நாதா ஓ கிருபாநிதே உம்முடைய சரணஸமீபத்தில் வஸிக்கின்ற நான் லஜ்ஜைவிட்டு தினம்தோறும் ஏதோ உளருகின்றேன் ஓ நடேசா ஓ தில்லவநேசா தீனனான என்னிடத்தில் கிருபையினாலே ஸரளமான என்னுடைய ஸ்தோத்ரத்தைக்கேளும். (111)

(தொடரும்)

ராஜா. சோமசேகர தீக்ஷிதர்.

சங்கரஜயந்தி மஹோத்ஸவக்கொண்டாட்டம் கோவல் வீரட்டானம் ஆர்யதர்மாபிவர்த்தினி

பிராம்மண ஸபா.

ஆங்கீரஸ வருஷம் சித்திரைமீ 29உ ஷை ஸபையில் சங்கர ஜயந்தி மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டது, அதில் ஸ்ரீமது ஆதிசங்கர பகவத்பாதாளுடையவும் தத்காலம் காக்ஷிகொடுத்தருளும் ஸ்ரீமது ஆசார்யாளுடையவும் பிரதிபிம்பங்களைவைத்து ஷோடசோபசார பூஜைகளை நடத்தி தீபாராதனை முடிவில் எல்லோரும் "நகர்மணு" என்கிற மந்திரத்தைச் சொல்லி பரமாசார்யாள் நேரில் இருந்தால் எப்படியோ அப்படியே பாவித்து மிகவும் பக்தி சிரத்தையுடன் வந்தனம்பண்ணிக்கொண்டு உட்கார்ந்தார்கள்.

பிறகு பிரும்மஸ்ரீ பாங்கு இனிஸ்பெக்டர் வெங்கடசுப்பையர் அவர்களால் ஆசார்யாளுடைய ஜனனத்தைப் பற்றியும் வைபவத்தைப்பற்றியும் உபன்யாஸம் நடத்தப்பட்டன. அமாநுஷகிருத்தியத்தைப்பற்றியும், உருக்கமாய் உபந்யஸிக்கப்பட்டு பிறகு மஹாஜனங்களுக்கு சந்தன தாம்பூல பானக விநியோகங்கள் நடத்தப்பட்டு ஸபை கலைந்தது.

ஸ்ரீநிவாஸ சாஸ்திரியள்.

காரியதர்சி.

மண்டகோளத்தூர் சங்கரஜயந்தி வைபவத்தில்
நடராஜசாஸ்திரிகள் அவர்களால் நிகழ்த்தப்பட்ட

உபன்யாஸச்சுருக்கம்.

(ஆசார்ய மஹிமை)

विश्वं दर्पणदृश्यमाननगरी तुल्यं निजान्तर्गतं
पश्यन्नात्मनि माययेव बहिरिवोद्भूतं यथा निद्रया ।
यः साक्षात्कुरुते प्रबोधसमये स्वात्मानमेवाद्वयं
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥

க்ருதத்ரேதாத்வாபரயுகங்களில் ஜீவராசிகளுக்கு தர்மத்தில் விசேஷமான பற்றுதலும் அதற்கேற்ப அனுஷ்டானங்களும் பூர்ணமாய் இருந்துவந்தமையால், மானிடர்கள் அக்ஞானத்தால் பாஸிப்பதாகிய தன்னுடையது என்ற ஆசையில் விசேஷமாக மோஹமடையாத காரணத்தால், அதர்மகார்யங்கள் மிகவும் குறைவாக இருந்துவந்தன. ஆனால் ரஜோகுண தமோகுண பூயிஷ்டர்களான அசுரர்களும் ராக்ஷஸர்களும் பலாத்காரமாக ஆயுதபலத்தாலும் மிருகப்ராயமான சேஷ்டைகளாலும் தர்மத்தில் ஈடுபட்டவர்களுக்கு கொலை ஹிம்ஸை என்பதாகிய குரூரச்செய்கைகளால் மிகவும் அதிகமாக உபத்திரவம் விளைவித்துவந்தனர். துஷ்டநிக்ரஹ பூர்வகம் சிஷ்டர்களைக்காப்பாற்றித் தர்மத்தை நிலைநிறுத்தும் உத்தேசத்துடன் ராமகிருஷ்ணாத்யவதாரங்கள் ஏற்பட்டு ராவணன் முதலிய துஷ்டர்கள் நிக்ரஹம் செய்யப்பட்டனர்.

ஆனால் இக்கலியில், தர்மத்தைச்செய்பவர் என்றும் கெடுப்பவர் என்றும் பாகுபாடின்றி அதர்மத்தில் மாற்றமுடியாத பிரவிர்த்தியும் தர்மத்தில் இயற்கையாக ஊக்கக்குறைவும் ஸர்வஸாதாரணமாக எல்லோருக்கும் அமையப்பெற்றிருத்தலால், நிக்ரஹ பூர்வகம் தர்மஸ்தாபனம் அவச்யமில்லாது போக, உபதேசத்தை மார்க்கத்தைத் தழுவி ஸத்பிரவிர்த்தியை உண்டுபண்ணவேண்டி ஸச்சிதானந்தஸ்வரூபியான பரமேச்வரன், ஸ்ரீ சங்கரபகவத்பாதாள் ரூபமாக அவதாரம்செய்தார். புது நாகரீகங்கள்பயனாக

ஆகாயவிமானம் முதலிய சாதனக்கருவிகள் இருந்துவரும் இக்காலத்தில், 2000 மைல் நீளமும் 1500 மைல் அகலமுங்கொண்ட இப் பாரதபூமியில், ஓர் ஸித்தாந்தத்தை ஒவ்வொரு கிராமமும் விடாமல் குறிப்பிட்ட காலவறைக்குள் ஸ்தாபிப்பது அஸாத்யமா இருக்க, 200 வருஷங்களில் மிகவும் சிரமத்தோடு செய்யக்கூடிய பெரியகாரியத்தை ஸ்ரீ சங்கரபகவத்பாதாள் ஸன்யாஸாச்ரமம் முதல் காஞ்சிபுரக்ஷேத்திரத்தில் ஜ்யோதிஸ்ஸூடன்கலந்து ஐக்யமான சுமார் 20 வருஷகாலத்திற்குள்ளாக இந்தியா முழுவதும் யாத்திரைசெய்து, தர்மத்தை நிலைநாட்டி, 72 துர்மதங்களைக் கண்டித்து, ஆஸ்திக ஷட்மதங்களை ஸ்தாபித்து, பல யந்திர ஸ்தாபனங்களைச்செய்து, 100வருஷகாலத்திலும்பூர்ணமாக படித்துத்தெரிந்துகொள்ளமுடியாத உயர்ந்த தத்வங்களைக்கொண்ட ஸூத்ர பாஷ்யம் கீதாபாஷ்யம் உபநிஷத்பாஷ்யம் முதலிய கணக்கற்ற நூல்களையும் இயற்றி ஸ்வயம் அநுஷ்டித்துக் காட்டி இருப்பதிலிருந்தே ஸ்ரீ பகவத்பாதாவதாரத்தின் பெருமை நன்கு விளங்கும்.

பூர்வயுகங்களில் ஆஸுரஸ்வபாவமுள்ளவர்களை நல்வழியில் திருப்பவேண்டி, அவரவர்களுடைய பிரவிர்த்திக் கொத்ததான பூர்வபக்ஷரூபமான நாஸ்திகஷட் தர்சனங்களைப் பிரகாசப்படுத்தி அதனின்று படிப்படியாக அவர்கள் தர்மத்தைக் கண்டுபிடிக்க உபதேசித்த பூர்வாசார்யர்கள் போல, ஸ்ரீ சங்கரபகவத்பாதாளும் பாஹ்யமானப்ரபஞ்சத்தில் பற்றுகொண்ட சிஷ்யகோடிகளை தர்ம மார்க்கத்தில் ப்ரவேசிக்கும்படி செய்வதற்கனுகூலமாக, ராஜ ஸன்னஹாதி பரிவாரங்களுடன் யாத்திரைசெய்து சிஷ்யர்களை உத்தாரணம் செய்யவேண்டுமென்ற இக்கினது பிரார்த்தனைக் கிணங்க, ஸ்ரீ ஆசார்ய பரம்பரையில் பரிவார ஸஹிதம் க்ஷேத்திர தீர்த்தாடனம் செய்துகொண்டு தர்மமார்க்கத்தையும் பிரசாரம் செய்துவருகிறார்கள்.

தர்மங்கள் ஸாமான்யதர்மமென்றும் விசேஷதர்மமென்றும் இருவகைப்படும். ஸாமான்யதர்மம் ஸத்யம் அஹிம்ஸை அன்பு பரோபகாரம் முதலியனவாகும். இவைகளெல்லா உலகத்திற்கும் எல்லா ஜீவராசிகளுக்கும் இயற்கையாய் இருக்கவேண்டியவைகள். இவைகளால் மிருகப்ராயமான கஷ்டஜன்மங்களிலிருந்து ஸுகானுபவத்திற்கு பாத்திரமான அத்வைதாத்ம ஸாக்ஷாத்காரத்

தை அடைய இவைகள் பிரயோஜனப்படமாட்டா. இவைகளால் ஜனனமாணரூபமாயும் மறையே ஏற்றத்தாழ்ச்சிகளுடைய சுக துக்கங்களோடு கூடியதாயுமுள்ளஸம்ஸாரபந்தம் நீடித்திருந்தே தீரும்.

மோக்ஷத்தை அடைவதற்கு ஸாதனமான கர்மயோகத்தில் அதிகாரம் படைத்தவர்களாகிய பாரத மக்கள் வர்ணாச்ரம தர்மங்களை அடிப்படையாகக்கொண்ட ஸனாதன மதானுஷ்டானங்களாகிய விசேஷ தர்மங்களைச் செய்து நம்மை நாம் புனிதப்படுத்திக் கொள்தவற்காகவும், உலக பந்தத்திலிருந்துவிடுதலை அடையவும் ஆசார்யாள் ஒருவர் இருக்கவேண்டியது அவசியமாகிறது.

ஞானிகள்பொதுவாக, பாஹ்ய திருஷ்டியுடையவர்களென்றும், ஆந்தர திருஷ்டியுள்ளவர்கள் என்றும் இருவகைப்படுவர். இருவகையினரும் பிரபஞ்சத்தின் அழியும் தன்மையையும் கஷ்ட நிலையையும் தெளிந்தவர்களாய், மெய்ப்பொருளான ஆனந்த அறிவு உருவமான பரம்பொருளிடத்தில் ஐக்யம் கொண்டவர்களாய் உலகப்பற்றற்றவர்களாயிருப்பினும், உள்பார்வையுள்ளவர்கள் மாயையால் உழலும் ஜீவாசிகளைப்பற்றிய கவலை ஒழித்தவர்களாய் ஆத்மஅத்வைத நிலையில் ஆனந்திப்பவர்களாய் இருந்துவா வெளிப்பார்வையுடைய ஞானிகள் மாயையால் கஷ்டப்படும் ஜீவராசிகளையும் அனுக்ரகிக்கும் நோக்கத்துடன் வ்யாவஹாரிகமான உலக சம்பந்தங்களையும் ஏற்றுக்கொண்டு நம்மிடை தினசரி வாழ்கையிலும் கலந்து காணப்படுகின்றனர். இப்பேற்பட்ட ஆசார்யாளுடைய அனுக்ரஹத்தாலும் உபதேசத்தாலுந்தான் நாம் தத்வங்களைத் தெரிந்துகொண்டு, ஸனாதன தர்மாசரணைகளை அனுஷ்டானத்தில் வைத்துக்கொள்ளவேண்டியவர்களாகவும் தர்மஸ்தாபனங்களை அபிவிருத்திக்குக் கொண்டுவரவேண்டியவர்களாகவும் இருக்கிறோம்.

உலகத்தில் தோன்றியுள்ள ஆர்யஸமாஜம் ப்ரம்ம ஸமாஜம் முதலிய இயக்கங்களும், கிருஸ்தவ மதம் மகம்மதிய மதம் முதலான மதங்களும் அதனதன் கொள்கைகளையும் உத்தேசத்தையும் ப்ரசாரம் செய்வதற்காதாரமாக நிதிகளை ஏற்படுத்தியிருக்கின்றன. நாமும் நமது தர்மாசரணைகளை மறையாமல் காப்பாற்ற விரும்பினால், நச்வரமான உலகப்பொருளில் ஆசையிருக்கும் வரையில்

உலகப்போக்கை நாமும் தர்மமுறையில் அனுஸரிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். நம்முடைய சொந்த விஷயங்களில் விசேஷமான விழிப்பும் தன்னலமான கார்யங்களில் முயற்சியும் இருக்கும் தருணத்தில் பொதுதர்ம மதப்ரசாரம்போன்ற ப்ரஸ்தாபம் ஏற்பட்ட காலத்தில் ஈதலினின்று பின்வாங்குவதோ, பொறுத்தமற்ற அழகிய வாதங்களைப் பொழிவதோ, ஸத்தான காரியத்தில் முன் அணியில் நின்று பங்கெடுத்துக்கொள்ளத் தயங்குவதோ நிரந்தரமான ஸந்துஷ்டியை உண்டுபண்ணமாட்டா.

நமது மதத்தின் ஸ்வரூபமே த்யாகம் என்று சொல்லப்படலாம். எந்த இயக்கத்தினரும் தங்கள் கொள்கைகளை நிலைநாட்டக் கருதி பல பெரிய தியாகங்களில் ஈடுபடுகிறார்கள். உதாரணமாக பல தேசங்களில் நடந்துள்ள கேவலம் ஐகிகமான சுகத்தை நோக்கமாகக்கொண்ட ராஜீய சுதந்த்ர யுத்தங்களும், தற்காலத்தும் ஆங்காங்கு நடைபெறும் சுதந்திர முயற்சிகளின் போற்றுதற்குரிய விசேஷமான தியாகங்களும் யாவருடைய மனதையும் கவரக்கூடியதாகும். இவ்வாறிருக்க பாரமார்த்திகமான மத விஷயத்தில் தியாகம்செய்ய மறுத்து உதாஸீனமாக இருந்துவருவோமானால் எத்தகைய கஷ்டங்களை எதிர்க்கநேரிடுமென்று தற்சமயம் சொல்லமுடியாது. ஸனாதன தர்மத்தின் இப்போதைய நிலைமையில் இவ்வளவுதூரம் உதாஸீனமாகும் தியாக உணர்ச்சி இன்மையும் இருந்தால் என்றுதான் நாம் மேல்படியை அடைவது? உலக பாசத்தை உதறித்தள்ளவேண்டியவர்களாகிய நாம் அழியும்பொருளில் விடாத பிடிப்புள்ளவர்களாயிருந்தால் முன்னேற வழியில்லை என்றே சொல்லலாம். பௌதிக ஞான சாஸ்திரங்களின் நவீனப்ரவிருத்திகளை அனுஸரித்தே மேல் நாட்டு நாகரீகத்தின் பயனாய் உலகபந்தங்களை அதிகப்படுத்துவதாயும், பாரமார்த்திக அபிவிருத்தியைத் தடைப்படுத்துவதுமாகிய இயந்திர வாழ்க்கை விர்த்தி அடைந்துவரும் இத் தருணத்தில் ஆசையை வளர்க்கும் பொருளிடத்துப் பற்றைத் திருப்பினால் ஸனாதனமதத்தின் பாவனமான அமைதியுற்ற வாழ்க்கை முறை அடியுடன் மாறுதல் பெறும்.

முதலில் பாப கர்மாக்களையும், பிறகு க்ரமேண உலகபந்தங்களையும், கடைசியாக ஸர்வ ஸங்க பரித்யாகம் செய்யவேண்டிய

நாம் மதாந்திரபரத்திற்காகவும் பரமார்த்திக அபிவிர்த்திக்காகவும், மதவிரோதமான சட்டங்கள் எதிரிடும்பொழுது மதக்கொள்கைகளுக்காகவும், தியாகம் செய்யத் தயங்கினால் ஸம்ஸார சக்ரத்திலிருந்து நாம் எவ்விதம் மீளமுடியும்?

லௌகிகமாக பல்வேறு துறைகளில் ஏராளமாக செலவழிக்கப்பட்டுவருவதாகிய செல்வத்தின் ஏகதேசத்தை பூர்ண சந்தோஷத்துடன் சந்திரமௌளீச்வரார்ப்பணரூபமாக மத கைங்கர்யத்திற்கு உபயோகமாகும்படி செய்வதுமன்றி நாமும் அவசியம் ஏற்படின் மதத்திற்காக எந்தத் தியாகத்தையும் செய்ய முன்வந்து அதன் மூலம் ஈச்வரானுக்ரஹம்பெற்று விசேஷ சிரேயஸ்களை அடையும்க்ரமமாக இப்பேற்பட்ட ஸத்கார்யங்களால் அழியும் பொருளில் வைராக்யமும் நச்வரமான ப்ரபஞ்சத்தில் ஆசையொழிவதற்கு ஹேதுவாகவும் இது இருப்பதால் இத்தகையகைங்கர்யங்களை வர்ஷப்ரதிவர்ஷம் யாவரும் செய்துவரவேண்டுமென்று ஸ்ரீமஹாஸ்வாமிகள் அவர்களும் ஆக்ஞை செய்திருக்கிறார்கள். இதன்மூலம் ஆசார்யாளுடைய ஞாபகம் எப்போதுமிருந்துவருவதற்கும், ஆசார்ய ஸ்மரணத்வாரா காலவசாத் ஏற்படக்கூடிய பரிபக்குவத்தை அனுஸரித்து ஆசார்யோபதேசங்களைப் பெறுவதற்கு ஸாத்யமாகவும் ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. இவ்வாறாக ஸத் ஸங்கத்தாலும் ஆசார்யோபதேசபலத்துடனும், அவரவர்களுடைய வாஸனாசக்தியை அனுஸரித்து தர்ம மார்க்கத்தில் ப்ரவர்த்தியும் க்ரமேண அக்ஞான நிவ்ருத்தியும் ப்ரபஞ்சத்தில் பாசமில்லாமையும், ஞானநிலையும் ஏற்படுகிறது.

இவ்விதம் கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் இவைகளுடைய ஆசரணைகளாலும்,ஸன்மார்க்கத்தைத் தழுவிய தியாக முறைகளாலும், பிறகு தடங்கலற்ற ஸமாதி விசேஷத்தாலும், அஹம் ப்ரம்மாஸ்மி, தத்வமஸி, இத்யாதி வாக்யபோத்யமான அகண்டாத்வைத நித்யானந்த ஸாக்ஷாத்காரம் ஏற்படுவதாகவும் மோக்ஷ நிலை சித்திப்பதாகவும் ஆகிறது.

இத்தகைய தர்ம மார்க்கங்களில் ப்ரவிர்த்தி ஏற்படவேண்டுமென்றும் ஸ்ரீ ஆசார்யானுக்ரஹத்திற்கு சிஷ்யகோடிகளாகிய அனைவரும் பாத்ரமாகி நிகிலமான சிரேயஸ்ஸையும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையும், ஆசார்ய பூஜிதமாயுள்ள ஸ்ரீசந்திரமௌளீச்வ

கடாக்ஷத்தால் அடையவேண்டுமென்பதாய் காமகோடி பீடத்தில் பிரகாசிக்கும் ஸ்ரீ ஆசார்யாளுடைய ஆக்ஞையை இந்த ஸதஸ்ஸில் விக்ஞாபித்துக்கொண்டு இவ்விடம் ஸ்ரீபகவத்பாதாள் ஜயந்தி மஹோத்ஸவத்தையும் ஸ்ரீபகவத்பாதபூஜிதமான சந்த்ரமௌளீச்வரபூஜாகைங்கர்யத்தையும் பக்திசிரத்தாபுரஸ்ஸரம் நடத்திவரவேண்டுமென்று பிரார்த்தித்து உபஸம்ஹாரம் செய்துகொள்ளுகிறேன்.

காஞ்சீபுரம் அரங்கேற்றுதல் வைபவம்.

ப்ரஜோத்பத்தி-வரு ஸ்ரீ சங்கரஜயந்தியில் ஆரம்பித்து இவ்வாண்டு ஜயந்திக்குள்ளாக "ஸ்ரீசங்கரோபதேசரத்னம்" ஸ்ரீமதாதி சங்கரபகவத்பாதாளது அகில க்ரந்தங்களின் ஸாரமான உபதேசத்தில் எளிய தமிழ் நடையில் சென்னை அமரகலா விலாஸினீ ஸபையார் பிரசுரித்துப் பூர்த்தியாக்கினர். அந்நூலை காஞ்சிமாநகரில் ஸ்ரீ காமாக்ஷி அம்பாளின் ஆலயத்தில் ஸ்ரீமதாதி சங்கரபகவத்பாதாள் பாதபத்மத்தினருகே வைக்கப்பட்டு பல பண்டிதர்களது முன்னிலையில் ஆசிரியரால் படிக்கப்பட்டது. பல பக்தர்கள் இதை ஆமோதித்தனர். ஸ்ரீ மதாச்சார்யாளின் ஆஜ்ஞையை முன்னிட்டு ஷை புஸ்தகத்தின் ஆசிரியர் ப்ரம்மஸ்ரீ ஸாஹித்யவாங் முகபூஷணம் ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா அவர்கள் ஸ்ரீ காமாக்ஷிஅம்பாள் ஆலயத்தில் அருமையான பல வேதாந்த உபந்யாஸம் செய்துவருகிறார். பலர் இந்நூலை ஆதரித்துப்போற்றினர். ஷை புத்தகங்கள் சென்னை தம்புசெட்டிவீதி 154 நெ. வே. ஸோமதேவசர்மா அவர்களுக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம். இதன் விலை ரூ 2—0—0 இப்புத்தகத்தை ஆமோதித்து ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீமுகம் அளித்திருக்கின்றனர். ப்ரம்மஸ்ரீ K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் B. A. B. L. (டிஸ்டிரிக்ட் ஜட்ஜ்) அவர்கள் முகவுரையும் கொடுத்திருக்கிறார்.

ராமநாதன்.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

விச்வாமித்ரர்.

1. கான்யகுப்ஜம் என்பது ஓர் தேசம். அதில் காதிஎன்று ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு ஓர் குழந்தைபிறந்தது. அதன் பெயரே விச்வாமித்ரன். தந்தைக்குப்பிறகு விச்வாமித்ரன் அரசனானன். வேட்டை ஆடுவது ராஜதர்மமல்லவா? அரசன் வேட்டைக்குச்சென்றான். வஸிஷ்டர் இவனைப்பார்த்தார். வந்தவர் எல்லோருக்குமே அதிதிபூஜை செய்யவேண்டுமல்லவா?

2. அரசன் விஷ்ணுவின் அம்சம். அவனைப் பூஜிக்கவேண்டாமா? வஸிஷ்டர் அவனை ஆச்ரமத்திற்கு அழைத்தார். ஸேனையோடுகூடிய தனக்கு ரிஷிஎப்படி அன்னம்அளிப்பர்? என்று ராஜா யோசித்தான். ரிஷி வற்புறுத்தினர். அரசனும் வந்தான். விருந்து நடந்தது. அவரவருக்கும் ஏற்றபடி உபசாரம் நடந்தது. எவரும் இதுவரை சாப்பிடாத அன்னம் அங்கே கிடைத்தது.

3. எல்லோரும் ஆநந்தமாக புஜித்தனர். பதார்த்தங்கள் மிக ருசியாயிருந்தன. தேவஸ்த்ரீகள் பரிமாறினர். எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். விச்வாமித்ரர், முனிவர் எப்படி இதைச் செய்தார்? என்று மந்திரியைக்கேட்டார். வஸிஷ்டரிடமுள்ள காமதேனுவின் மஹிமை இது என்று அறிந்தார். அந்த பசுவை அபஹரிக்க எண்ணினர். இதற்குப்பதில் பல பசு தருவதாகச் சொன்னர்.

4. கோடி பசுவானுலும் காமதேனுவுக்கு ஈடாமோ? தவத்தினுல் வந்தது அது. அதை எப்படிக் கொடுப்பார்? ராஜா பலாத்காரமாக அதை இழுத்தான். அது ஹூம் என்று கத்திற்று. அதனுல் பல வீரர் இறந்தனர். உடம்பைச் சிலுத்தது. ஆயிரக் கணக்கான வீரர் பிறந்தனர். ராஜசேனையோடு யுத்தம்செய்தனர். ஸேனை அழிந்தது. ராஜா கோபங்கொண்டான். வஸிஷ்டருடன் யுத்தம்செய்தான்.

5. வஸிஷ்டர் தண்டத்தை எதிரில் நிறுத்தினர். அதன் பின் உட்கார்ந்தார். விச்வாமித்ரர் பாணங்களை தண்டம் விழுங்கியது. ராஜா சிவனைக்குறித்து தவம்செய்தார். அநேகதிவ்யாஸ்த்

திரங்களைப்பெற்றார். அதனால் வஸிஷ்டரைத் தாக்கினார். அவைகளும் வீணாயின. விச்வாமித்ரர் வருந்தினார். க்ஷத்ரியபலம் பயனில்லை. ப்ருஹ்மபலமேபலம்!! என்று எண்ணினார். தானும் ப்ராஹ்மணனாக ஆசைகொண்டார்.

6. ஒரேபிறப்பில் வேறு ஜாதிவருமோ? வராது! இவர் விஷயம் வேறு! பிராமணன் பிறக்க ஓர் சரு, க்ஷத்ரியன்பிறக்க ஓர் சரு என்று ரிஷியால் மந்திரிக்கப்பட்டிருந்தது. ப்ராமண ஸ்திரீ க்ஷத்திரியசருவைப் புஜித்தாள். க்ஷத்ரியஸ்த்ரீ ப்ராஹ்மண சருவைப் புஜித்தாள். ஆகையால் க்ஷத்ரியஜாதியில் பிறந்த விச்வாமித்ரர் பிராமணரானார். ரிஷிவம்சத்தில் பிறந்த பரசுராமர் க்ஷத்ரியரானார்.

7. விச்வாமித்ரர் ஒரு திக்கில் சென்று தவம்புரிந்தார். மேனகைவந்து அதைக்கெடுத்தாள். மற்றோர்திசை சென்றார். அங்கே ஓர் குழந்தைவந்து நமஸ்கரித்தது. நீ யார்? என்றார். பெற்றோர் நரபலியாக என்னைக் கொடுத்துவிட்டனர்! ஓர் யாகத்தில் பலியாகப்போகிறேன் நான் என்றான். விச்வாமித்ரர் அவனுக்குப் பதிலாக தன் பிள்ளைகளில் ஒருவனைப் போகச் சொன்னார். அவர் முடியாதென்றனர். விச்வாமித்ரர் கோபங் கொண்டார்.

8. அவர்களைப்பறையனாகும்படி சபித்தார். சாபம்கொடுத்தால் தவம் குறைந்துவிடாதா? அந்தகுழந்தைக்கு ஓர் மந்த்ரத்தை உபதேசித்தார். அதனாலும் அவர் தபங்குறைந்தது. வேறிடம் சென்றார். தவம் கடுமையாகச்செய்தார். த்ரிசங்கு என்று ஓர் அரசன் வந்தான். அவன் சரீரத்துடன் ஸ்வர்க்கம்போக ஆசை கொண்டான். வஸிஷ்டரைக்கேட்டான்.

9. அவர் அங்ஙனம் ஆகாதென்றார். அவர் பிள்ளைகளைக் கேட்டான். அவர்களும் முடியாதென்றனர். த்ரிசங்கு அவர்களை நிர்ப்பந்தம் செய்தான். சண்டாளனாகும்படி அவனைச் சபித்தனர். அவனே விச்வாமித்ரரிடம் வந்தவன். அவர் யாகம் செய்துவைப்பதாகச் சொன்னார், எல்லோரையும் யாகத்திற்கு அழைத்தார். வஸிஷ்டபுத்ரர் இந்த யாகத்தைக் கேட்டு பரிஹஸித்தனர்.

10. அவர்களையும் விச்வாமித்ரர் சபித்தார், யாகத்தை ஆரம்பித்தார். மந்த்ரசக்தியால் த்ரிசங்குவை ஸ்வர்க்கத்திற்கனுப்பினார்.

தேவர்கள் அவனைக்கீழே தள்ளிவிட்டனர். தபோமஹிமையால் விச்வாமித்ரர் அவனை ஆகாயத்திலே நிறுத்தினர். ரிஷி தேவரிடம் கோபங்கொண்டார். வேறு தேவரைப் படைப்பேனென்றார்.

11. ப்ரம்மாதிதேவர் வந்தனர். இவரை ஸமாதானம் செய்தனர். தவத்தைக்கண்டு வியந்தனர். ப்ரும்மரிஷி என அழைத்தனர். நற்காரியத்தில் விச்வாமித்ரரைப்போல் விடாமுயற்சி வேண்டும். த்ருசங்குவைப் போல் குருவிற்கு அபராதம் செய்யக்கூடாது.

ஸ்ரீவத்ஸ. வே. ஸோமதேவசர்மா,

வாரவிருத்தாந்தம்.

கும்பாபிஷேகம் 11ௗ சென்னைக்கடுத்த பெரம்பூர் டாக்டர் ஸத்ரத்தில் உள்ள ஸ்ரீ காசிவிச்வநாதஸ்வாமிக்கு அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடைபெற்றது. பல ஊர்களிலிருந்து வேதபாராயணக்காரர்கள் வந்திருந்தனர். பிராம்மணபோஜனமும், ஸம்மானமும் மிகச்சிறப்பாக நடந்தது. 12ௗ சென்னை முத்யால்பேட்டை மல்லிகேச்வரர் ஆலயத்தில் ஸ்ரீஷண்முகருக்கு ஒருகும்பாபிஷேகம் நடந்தது.

சென்னை ஸ்ரீமடம் 7ௗ ஸ்ரீசங்கரஜயந்தியை முன்னிட்டு, ஸ்ரீமடம்சிஷ்யகோஷ்டியார் ப்ரஸ்தானத்ரயம்,உபநிஷத்முதலியவைகளைப் பாராயணம் செய்ய, மாலையில் பல அரிய உபன்யாஸங்கள் நடந்தன. பல பக்தர்கள் வந்து ஸ்ரீமதாசார்ய பூஜையைத் தர்சித்து ச்ரவணாநந்தம் பெற்றனர். புராண பக்தசபைப் பெண்களும், மற்றோரும் வேண்டிய அரிசி அளிக்க, 11ௗ பல நூறு பிராமணர்களுக்கு ஸமாராதனை நடந்தது. ஸ்ரீ குருவிக்ரஹம் வீதிவலம் வந்தது. இம்மடத்திற்கு அதிகாரியாயுள்ள ஸ்ரீமான். ஆர். சுப்ரமண்ய அய்யர் தக்க முயற்சி எடுத்துக்கொண்டு மிகச்சிறப்பாக நடத்திவைத்தார்.

பக்தர் வாழ்க! 10ௗ பண்ருட்டியில் ஸ்ரீசங்கரஜயந்தி விசேஷ வைபவத்துடன் நடந்தது. ஸ்ரீமதாசார்ய பிரஸாதத்தை மேளத்துடன் ஊர்வலமாக எடுத்துவந்து நந்தவனத்தில் ஆயிரக்கணக்

க்கான ஆஸ்திகமஹாஜனங்கள் பலர் கூடினர். மதஜாதிபேத மின்றி ஒற்றுமையாக பலர் நேரமானதைக் கவனியாமல் 3மணி உபன்யாஸத்தைக் கேட்டனர். இவ்வளவு விசேஷமாக நடக்க பலர் இரவு பகலாக அலைந்து திரிந்து ப்ரயாசைப்பட்டனர். ஸ்ரீ ஸ்ரீசாம்பமூர்த்தி கனபாடிகள் ஸ்ரீ பரமேச்வரய்யர் இவர்களது உழைப்பைக்கொண்டாடாதவரில்லை. இவர்களும் ஏனைய பக்தர் களும் நீண்ட ஆயுள் பெற்று பல தர்மகைங்கர்யம் புரிவார்களாக!

தஞ்சை ப்ராம்மண ஸபை 10வ ஸ்ரீசங்கராராமானுஜ ஜயந்தி களை ஷை சபை கொண்டாடிற்று. பலர் அரிய உபன்யாஸம் செய்தனர். கோயம்புத்தூரிலும் விசேஷமாக நடந்தது.

தர்மப்ரும்ம தீர்த்தம் 11வ ஷை தர்மத்தின் வருஷாந்திர அறிக்கை வெளிவந்திருக்கிறது, ப்ராம்மணர்கள் அபரக்ரியை செய்வதற்கு சென்னையில் இது ஒரிடமே தகுந்ததாக உளது. இதில் வேண்டிய ஸௌகரியங்களைச் செய்கின்றனர். க்ரியை செய்பவர்களிடம் யாதொரு வாடகையும் வசூலிப்பதில்லை. ஏக காலத்தில் பல கார்யங்களைச் செய்ய அவகாசமுளது. ஆங்கு ஓர் நந்தவனமும் தடாகமுமிருக்கிறது. தடாகத்தை நன்றாக கட்ட தக்கமுயற்சி செய்யப்படுகிறது. ஆஸ்திகரனைவரும் ஆதரித்தல் வேண்டும்.

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடம் 10வ முதல் ஷை பீடத்தை ஸ்தாபித்து காஞ்சிமா நகரில் காமாக்ஷி ஆலயத்தில் அர்ச்சாவதார மாய் அமர்ந்துள்ள ஆதிசங்கரபகவத்பாதாளுக்கு ப்ரதிதினம் திவ் யாபிஷேகமும் இரவு ஆலயப் ப்ரதக்ஷிணமும் நடைபெற்றது. ப்ரும்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் முதல் மூன்று நாள் இரவு அழகாக உபன்யஸித்துச் சென்றார். ப்ரும்மஸ்ரீ போலகம் ராமசாஸ்திரிகள் ஆலயத்திலும் மடத்திலும் அரிய வேதாந்த உபந்யாஸம் செய்தார். அவரது அபாரமான கல்வியை யும்,கல்விக்கேற்ற வினயத்தையும்கண்டுகளிக்காதாரில்லை. அவரது சிஷ்யர் சிரஞ்சீவி சுப்ரமண்யசாஸ்திரியும் வாக்தாடியுடன் ஆசார்ய பக்தியைக் குறித்து அழகாக உபன்யஸித்தார். அடியேனும் ஆசார்யானுக்ரஹத்தை முன்னிட்டு ஐந்தாறு உபன்யாஸங்கள் செய்தது.

ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா.